The narration of the Commissioner of Police, Madras, as reported alleges certain acts of commission by the students as the cause for the trouble. The statement is one which will affect the course of the judicial enquiry which was announced by the Chief Minister on the floor of the House on the forenoon of 26th March 1968.

Hence I request that this House be pleased to take note of it and refer the same to the Committee of Privileges for breach of privilege ".

உறுப்பினர் அவர்களே அவர்களுடைய கடிதத்தில் 'The statement is one which will affect the course of the judicial enquiry' என்று அந்த ஒரே ஒரு காரணம்தான் சொல்லியிருக்கிறார்கள். That being the only reason, it would be for the Judge to take note of contempt, if any, and I do not want to and cannot trespass into the jurisdiction of the Judge who sits on the enquiry. Therefore, no *prima facie* case has been made out under Rule 188.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: தலைவர் அவர்களே, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்துவிட்ட போதிலும் அவர்கள் எழுப்பிய பிரச்சினைகளில் ஒரு விஷயத்தை மட்டும் நான் அவையில் சொல்வதன்மூலம் விளக்கவேண்டுமென்று விரும்புகிறேன். மாணவர்கள் விடுதிகளிலே உள்ள மாணவர்களுக்குப் பொதுவாக தாங்கள் தாக்கப்படக்கூடும் என்ற கலவர உணர்ச்சி, பீதி உணர்ச்சி இருப்பதைக் குறிப்பிட்டு, அவர்களுக்குப் போதுமான அளவுக்குப் பாதுகாப்பு தரப்பட வேண்டுமென்று அவர்கள் சுட்டிக் காட்டியதை நான் முழுக்க முழுக்க வரவேற்கிறேன். மாணவர்கள் தாக்கப்படாமல் இருப்பதற்கு அவர்களுக்குத் தேவையான பாதுகாப்புத் தருவதற்கு எல்லாவிதமான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எந்த ஹாஸ்டலில் எந்த எந்த விதமான நிலைமைகள் இருக்கின்றன என்பதை அவ்வப்பொழுது மாலையிலும் காலையிலும் தொலைபேசி மூலமாகக் கேட்டறிந்து அவ்வப்பொழுது அந்த அந்த இடங்களுக்குப் போதுமான பாதுகாப்பு, போலீஸ் அந்த அந்த இடங்களிலே அமர்த்துவதன்மூலம் போடப்படுகின்றன. அது மட்டுமல்ல, நகர் முழுவதும் ரோந்து வருகிற போலீஸ் படையினரும் ரோந்து சுற்றிக்கொண்டே வருகிறார்கள். ஆகையால், மாணவர்கள் எந்த விதமான பீதியும் இல்லாமல் அவர்கள் ஹாஸ்டலில் வாழ்வதற்குத் தகுந்த எல்லா நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்ற உறுதியினை மாணவர் சமுதாயத்திற்கு இந்த அரசு உறுதியாக அளிக்கிறது.

MR. SPEAKER: Taking note of the additional facts mentioned by the Hon. Chief Minister, I also hold that no *prima facie* case of breach of privilege exists against the newspaper.

திரு. பி. வேலுசாமி : ஆன் எ பாயின்ட் ஆப் க்ளாரிபிகேஷன். இந்த மாணவர்கள், தொழிலாளிகள் கைது செய்யப்பட்டதோடல் லாமல், பொதுமக்களும் கைது செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப் படுகிறதே, அவர்கள் ஏதாவது அரசியல் கட்சியைச் சேர்ந்தவர் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பல்வேறு நடவடிக் கைகளில், இதிலே ஈடுபட்டிருந்த பொதுமக்களில் 3 பேர் காயம் அடைந்திருக்கிறார்கள். கைது செய்யப்பட்டவர்களில் 12 பேர் பொதுமக்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் எல்லாம் விடுவிக்கப்பட்டார்கள்.

திரு. பி. வேலுசாமி : ஏதாவது அரசியல் கட்சியைச் சேர்ந்த வர்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அரசியல் கட்சி களைச் சேர்ந்தவர்களா என்ற விவரம் என்னிடம் இல்லை.

(ii) 'மாலை மணி' நாளிதழில் பேரவை நடவடிக்கை குறித்து வந்துள்ள தவறான செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்குக் கடைசி நாளாக இருப்பதால் அவை உரிமைக் கேள்விகளையெல்லாம் தீர்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து அவை உரிமைக் கேள்வி— பிரிவிலேஜ் மாட்டர்—திரு. க. இராமமூர்த்தி அவர்கள் முன்னறி விக்கை கொடுத்திருப்பது அதை இப்பொழுது படிக்கிறேன்.

"I hereby give notice of the following under rule 184 of the Madras Legislative Assembly Rules for breach of privilege of this House on the newspaper MALAI MANI, dated Madras, 26th March 1968, mofussil 27th March 1968, for having wantonly and knowingly misquoted and reported the proceedings of this House on 26th March 1968. Under the caption, "பூவராகன் குற்றச்சாட்டு : ஆதாரமற்றது : கருத்திருமன் ஒப்புக்கொண்டார்" the newspaper has reported the discussion on District Administration and Miscellaneous in detail wherein at no stage is there any utterance by Hon. Thiru P. G. Karuthiruman accepting the charge by Hon. Thiru G. Bhuvaragan as baseless. This act of the newspaper is purposeful as the headline is certain to tarnish the image of the Hon. Members concerned and the Congress Legislature Party to which they belong in the eyes of the public. Hence I move that this House be pleased to take note of the same and refer the same to the Committee of Privileges for breach of privilege."